# சேலம் - பெத்தநாயக்கன் பாளையத்தில் - தி.மு.க. இளைஞர் அணி

# 2வது மாநில மற்றும் மாநில உரிமை மீட்பு மாநாட்டின் எழில்மிகு ஏற்பாடுகள்!














### அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் வரவேற்புடன், கேலோ விளையாட்டுப்போட்டி கோலாகலமாக தொடங்கியது!

# முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் முன்னிலையில் போட்டிகளை பிரதமர் தொடங்கி வைத்தார்!

## தமிழர்களின் பாரம்பரிய விளையாட்டுகளை பறைசாற்றும் கண்கவர் கலைநிகழ்ச்சிகள்!

**சென்னை, ஜன.21-**

**கேலோ விளையாட்டுப்போட்டி சென்னையில் கோலாகலமாக தொடங்கியது. முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் முன்னிலையில் பிரதமர் மோடி போட்டிகளை தொடங்கி வைத்தார். இளைஞர் நலன் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதய நிதி ஸ்டாலின் அவர்கள் அனைவரையும் வரவேற்று பேசினார்.**

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கேலோ இந்தியா இளைஞர் விளையாட்டுப் போட்டிகள் - 2023-ஐ, சென்னையில் நடத்திட முடிவு மேற்கொண்டதைத் தொடர்ந்து இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தமிழ்நாடு அரசின் தலைமைச் செயலாளர் உள்ளிட்ட அரசின் உயர் அலுவலர்கள், விளையாட்டு மேம்பாட்டு ஆணைய அதிகாரிகள் அனைவருடனும் இணைந்து இந்தப் போட்டிகளை வெற்றிகரமாக நடத்தி முடிப்பதற்கான அனைத்து ஏற்பாடுகளையும் சிறப்பாக நிறைவேற்றியுள்ளார்கள்.

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி அவர்களை சென்னைக்கு வருகை தந்து கேலோ இந்தியா இளைஞர் விளையாட்டுப் போட்டிகளைத் தொடங்கி வைத்துச் சிறப்பிக்குமாறு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் 4-1-2024 அன்று புது டெல்லி சென்று அழைப்பு விடுத்தார்.

இந்த அழைப்பினை ஏற்றுக் கொண்ட பிரதமர் நரேந்திர மோடி அவர்கள் நேற்று முன்தினம் (19.1.2024) சென்னைக்கு வருகை தந்து மாலை 6.00மணிக்குஜவகர்லால்நேருவிளையாட்டரங்கில், கேலோ இந்தியா விளையாட்டுப் போட்டிகளை முறைப்படி தொடங்கி வைத்தார்.

தமிழ்நாடு ஆளுநர் ஆர்.என்.ரவி, முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

ஒன்றிய அரசின் இளைஞர் விவகாரம் மற்றும் விளையாட்டு கள், செய்தி மற்றும் ஒளிபரப்புத்துறை அமைச்சர் அனுராக் தாக்கூர், ஒன்றிய அரசின் உள் விவகாரங்கள், இளைஞர் விவகாரங்கள் மற்றும் விளையாட்டுத்துறை இணையமைச்சர் நிசித் பிரமாணிக், தமிழ்நாடு அரசின் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் ஆகியோர் பங்கேற்றனர்.

விழா மேடைக்கு வந்த பிரதமர் மோடியை பொன்னாடை அணிவித்து முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வரவேற்று, உளி ஓவியங்கள் புத்தகத்தை பரிசாக வழங்கினார். இதையடுத்து முதலமைச்சர் முன்னிலையில் பிரதமர் மோடி கேலோ விளையாட்டுப் போட்டிகளை தொடங்கி வைத்தார்.

முன்னதாக பிரதமர் மோடி அவர்களுக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களும், ஆளுநர் ஆர்.என். ரவி, ஒன்றிய அமைச்சர் அனுராக் தாக்கூர், இணை அமைச்சர்கள் நிசித் பிரமாணிக், எல்.முருகன் ஆகியோருக்கு அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களும் நினைவுப் பரிசு வழங்கினார்கள்.

**கண்கவர்**
**கலைநிகழ்ச்சிகள்!**

தென்னிந்தியாவில் முதன் முதலாக கேலோ இந்தியா விளையாட்டுப் போட்டியின் தொடக்க விழாவில் தமிழர்களின் பாரம்பரிய விளையாட்டுகளை பறைசாற்றும் வகையில் கண்கவர் கலைநிகழ்ச்சிகள் களை கட்டின.

தமிழ்நாட்டின் பாரம்பரிய விளையாட்டான சிலம்பம் டெமோ விளையாட்டாக இடம் பெற்றுள்ள நிலையில், கருப்பு, சிவப்பு உடை அணிந்திருந்த சிலம்பாட்ட வீரர், வீராங்கனைகள் உலக சாதனை முயற்சிக்காக சிலம்பக் கலையை அறங்கேற்றியது கண்களுக்கு விருந்தாக அமைந்தது

பள்ளி மாணவ, மாணவிகளின் கலைநிகழ்ச்சிகளும் தொடக்க விழாவில் அரங்கேறின. மல்லர் கம்பம், மான்கொம்பு, களரி, வாள்வீச்சு, பொய்க்கால் குதிரை உள்ளிட்ட பாரம்பரிய விளை யாட்டுகளும் பார்வையாளர்களை வெகுவாக கவர்ந்தன.

கலைநிகழ்ச்சிகளில் சிறப்பு நிகழ்வாக உலகின் மூத்த குடி நம்குடி என நடனக்குழுவினர் ஓங்கி ஒலித்தது அரங்கமே அதிர்ந்தது. தமிழர்களின் பாரம்பரிய விளையாட்டுகளை பார்த்த பிரதமர் மோடி, முதலமைச்சர் மு.க.ஸ்டாலின், அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் மற்றும் விழா மேடையில் இருந்தவர்கள் கைதட்டி வரவேற்று ரசித்தனர்.

23-1-2024 அன்று தொடங்கி 31-1-2024 வரை நடைபெறும். இந்த விளையாட்டுப் போட்டிகள் சென்னையில் மட்டுமல்லாமல் திருச்சி, கோயம்புத்தூர், மதுரை ஆகிய நகரங்களிலும் நடைபெறுகின்றன.

தடகள விளையாட்டுகளான கால்பந்து, கபடி. வாலிபால், ஜூடோ, பளு தூக்குதல், ஸ்குவாஸ், வில் வித்தைகள், குத்துச் சண்டை, பூப்பந்தாட்டம், டேபிள் டென்னிஸ், சைக்கிள், ஜிம்னாஸ்டிக், நீச்சல், ஆக்கி, டென்னிஸ், துப்பாக்கி சுடுதல், யோகா, மல்யுத்தம் முதலிய விளையாட்டுப் போட்டிகள் நடைபெறும்.

கேலோ இந்தியா விளையாட்டுப் போட்டிகளில் நம்நாட்டின் 36 மாநிலங்கள் மற்றும் ஒன்றிய நிர்வாகப் பகுதிகளிலிருந்து 18 வயதிற்குட்பட்ட வயதுப் பிரிவில் 5,500க்கும் மேற்பட்ட விளையாட்டு வீரர்களும், வீராங்கனைகளும், 1,600க்கும் மேற்பட்ட பயிற்சியாளர்களும் பங்கேற்கின்றனர். இந்த விளையாட்டுப் போட்டிகளைச் சிறப்பாக நடத்திட 1,000க்கும் மேற்பட்ட நடுவர்கள், 1,200க்கும் மேற்பட்ட தன்னார்வலர்கள் துணைபுரிவார்கள்.

இந்த கேலோ இந்தியா இளைஞர் விளையாட்டுப் போட்டிகள் 2023இல் முதல்முறையாக தமிழ்நாட்டின் பாரம்பரிய விளையாட்டான சிலம்பம் உட்பட மொத்தம் 27 விளையாட்டுகள் காட்சி விளை யாட்டுகளாக (DEMO Sports) இடம் பெறுகின்றன.

இந்த விளையாட்டுப் போட்டிகள் ஒவ்வொன்றும் நடைபெறும் இடம், நாள், நேரம் ஆகியவை குறித்த விவரங்கள் விளையாட்டு ஆர்வலர்களுக்கு வசதியாக இணையம் மூலம் வெளியிடப்பட்டுள்ளது.

தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் இந்திய விளையாட்டு ஆணையம், பல்வேறு தேசிய விளையாட்டுக் கூட்டமைப்பு கள் ஆகியவற்றுடன் இணைந்து போட்டிகளுக்கான அனைத்து ஏற்பாடுகளையும் திட்டமிட்டுள்ளது.

போட்டிகள் சிறந்த முறையில், நடைபெறுவதற்கான கட்டமைப்பு வசதிகள், விளையாட்டு வீரர்கள் வந்து தங்குவதற்கான இடவசதிகள், உணவு வசதிகள், போட்டி நடைபெறும் இடங்களுக்குச் செல்வதற்கான போக்குவரத்து வசதிகள் அனைத்தையும் தமிழ்நாடு அரசு மிகச் சிறப்பாகத் திட்டமிட்டு ஏற்பாடுகளைச் செய்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### மு.ப. அழகியநம்பி
**சனவரி 21 (2022)**



கழகம் துவக்க காலத்திலேயே கழகக் கொள்கையில் ஈடுபாடு கொண்டு, சட்டக் கல்லூரியில் மாணவராக பயிலும் போதே 'மாணவர் தி.மு.க.'வில் உறுப்பினராகி பணியாற்ற தொடங்கியவர்.

1971ஆம் ஆண்டு, தூத்துக்குடி உள்ளடக்கிய ஒருங்கிணைந்த நெல்லை மாவட்டச் செயலாளராக பொறுப்பு வகித்து கழகம் வளர்த்தவர்.

நெல்லை மாவட்ட கூட்டுறவு வங்கி தலைவராகவும் – மாநில தமிழ்ச் சங்க தலைவராகவும் பதவி வகித்தவர்.

நெருக்கடிகால மிசா சட்டத்தில் கைது செய்யப்பட்டு பதினான்கு மாதங்கள் சிறைவாசம் அனுபவித்தவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**